# கீழக்கரை நகர்மன்ற 31.08.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள்: 1**

இந்நகராட்சி அலுவலகத்தில் கணினி மற்றும் பிரிண்டர்கள் இயக்கப் பயன்படுத்தப்படும் 7.5 KVA Online UPS யை பழுது நீக்கம் செய்யவும் புதிதாக மின்கலன்கள் (Battery) மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் விநியோகம் செய்து பொருத்தி கொடுக்கும் பணிகள் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலைவிகிதங்களின் நிலையான அட்டவணையில் (Standard Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாததால் இவ்வலுவலக பொறியாளர்களின் 12.08.2020–ந் தேதிய அறிக்கையின்படி, கீழ்காணும் விவரப்படியான மின்சாதனப் பொருட்களுக்கு 13.08.2020–ந் தேதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு, சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) குறிப்பிட்டு 27.08.2020–ந் தேதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | நிறுவனத்தின் பெயர் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **Sri Kamatchi Battries Works** No.1/1038, Near Kumaraiyakoil Bus stop, Mandapam Road, Ramanathapuram | | | **Ramnad Batteries,** 3, R.R. Sethupathi Nagar, Ramanatha puram | | |
| | | | **Rate** | **GST** | **Total** | **Rate** | **GST** | **Total** |
| 1 | Microtek Tubular | 1 | 10039 | 2811 | 12850 | 10234 | 2866 | 13100 |
| 2 | Battery Leg with Bold Nut | 1 | 381 | 69 | 450 | 432 | 78 | 510 |
| 3 | 7.5 KVA Online UPS Full Services with Spares Replacement | 1 | 24000 | 0 | 24000 | 24800 | 0 | 24800 |
| 4 | Battery Trally Stand | 1 | 9492 | 1708 | 11200 | 10469 | 2931 | 13400 |
| | **Gross Total Amount** | | **43912** | **4588** | **48500** | **21135** | **5875** | **51810** |
| 5 | Old Battery Scrab Less | 1 | -750 | - | -750 | -650 | - | -650 |
| | **Net Total Amount** | | **43162** | **4588** | **47750** | **20485** | **5875** | **51160** |

**(கோப்பு எண்.364/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 7.5 KVA Online UPS பழுது நீக்கம் (Full service) செய்யவும் புதிதாக மின்கலன்கள் (12V 110 AH TUBULAR Battery) மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பொருத்தும் பணி செய்வதற்கு வரிசை எண்.1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு (பழுதான கழிவு நிலையில் உள்ள பழைய மின்கலன் (Old Battery) விலையினை கழித்து) குறைந்த விலைப்புள்ளியின் விலைவிகிதத்தின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.760 அனுமதிக்கப்பட்டது.**

பொருள்: 2

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டுக்கு ரூ.8,70,000/– மதிப்பீட்டில் விநியோகம் செய்வதற்கும் அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தில் 31.03.2020–ந் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 2020–2021 ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான தெருமின் விளக்குகள் பராமரிப்பு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 20.05.2020 மற்றும் 11.06.2020–ந் தேதிகளில் முதல் மற்றும் இரண்டாம் அழைப்பு கோரப்பட்டது. மேற்காணும் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்படாத நிலையில், 30.07.2020–ந் தேதி மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து இந்நகராட்சி பொறியாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது அவற்றை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2020–2021 (மூன்றாம் அழைப்பு)** | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு உதிரி பாகங்கள் 2020–2021 ஆம் ஆண்டுக்கு விநியோகம் செய்தல் | 8.70 | ஸ்ரீமங்களம் எலக்ட்ரிக்கல் & சானிடரிஸ், புதிய பேருந்து நிலையம் அருகில், கீழக்கரை | ரூ. 9,07,274/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.98% கூடுதல் |
| | | | ஸ்ரீமங்களம் ஏஜென்ஸி, 2/65–A, முத்துச்சாமிபுரம், கீழக்கரை | ரூ. 9,10,851/– விலைவிகிதத்தினை காட்டிலும் 5.40% கூடுதல் |

**(கோப்பு எண். 126/2020/இ1)**

அலுவலகக் குறிப்பு:

1. ஸ்ரீமங்களம் எலக்ட்ரிக்கல் & சானிடரிஸ், கீழக்கரை மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து உடன்படிக்கை செய்து கொடுக்க கோரியதில், மேற்கண்ட பணிக்குரிய பொருட்கள் கோவிட்–19 ஊரடங்கு அமலில் உள்ள நிலையில் மார்க்கெட்டில் தற்போது கிடைப்பதில் மிகவும் தட்டுப்பாடாகவும், அனைத்து மின்பொருட்களின் விலை விகிதங்கள் கூடுதலாகவும் உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.98 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.761 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 3**

கீழக்கரை நகராட்சிக்கு உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரமாக விளங்கும் மாலாங்குண்டு, குடிநீர் ஏற்றும் நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் இந்நகராட்சிக்குட்பட்ட கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் உள்ள 4.00 லட்சம் லிட்டர் மற்றும் 1.80 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக தினந்தோறும் நீர்உந்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சுமார் 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட மாலாங்குண்டு நீர் நிலைய கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் முன் மற்றும் பின் பகுதியில் (பகுதியாக) தடுப்பு வேலி அமைந்துள்ளது. மற்ற இருபுறமும் வேலியோ தடுப்போ இல்லாத நிலையில் உள்ளதால் சமூக விரோத செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதால் உரிய தடுப்பு வேலி (Chain link fencing) அமைக்குமாறு ஆணையர் அவர்களின் நேரடி ஆய்வின் மூலம் தெரிவிக்கப்பட்டதாக, இந்நகராட்சிப் பொறியாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட மாலாங்குண்டு நீர் ஏற்றும் நிலைய கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் தடுப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.1,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 408 /2020/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. மாலாங்குண்டு நீர் நிலைய கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, அப்பகுதியில் தடுப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.1,50,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.762 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 4**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 15 கி.மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மூலமாக மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் சாலை ஓரங்களில் உள்ள வடிகால்கள் வாகன போக்குவரத்து நெரிசல் காரணமாக கழிவுநீர் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் வாகனம் ஓட்டுபவர்கள், பொதுமக்கள் சாலையில் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படும் நிலையில், அலுவலகத்திற்கு பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள, மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் மேற்புற மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு ரூ.3,20,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.409/2020/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,20,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.763 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 5</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பொதுமக்களால் வெளியேற்றப்படும் கழிவுநீர் இந்நகராட்சியால் PVC கழிவு நீர் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டு புதுக்குடி, தட்டான்தோப்பு மற்றும் புதிய பேருந்து நிலையம் மாட்டுக் கொட்டகை பகுதிகளில் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மின்மோட்டார் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் சாலையில் போடப்பட்டுள்ள PVC குழாய்கள் தொட்டிகள் மற்றும் அதன் மூடிகள் உடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள், வாகன ஓட்டுபவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,90,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண். 410/2020/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.2,90,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.764 அனுமதிக்கப்பட்டது.</u>**

பொருள்: 6

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமம் காட்டுப்பள்ளியில் தங்கியிருக்கும் கேரளா மற்றும் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், உணவின்றி தவித்து வருவதால் கீழக்கரை நகர் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவு கட்டணங்கள் செலுத்தி மேற்கண்ட நபர்களுக்கு உணவுகள் தயார் செய்து வழங்குமாறு கீழக்கரை, நிஷா பவுன்டேசன் 24.03.2020 மற்றும் 31.03.2020–ந் தேதிய விண்ணப்பம் மற்றும் இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் ந.க.அ9/1963/2020, நாள். 11.04.2020ந்தேதிய உத்திரவின்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவுகள் தயார் செய்து வழங்குவதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி உள்ளூர் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்துமாறு, இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். சிவசங்கர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.07.2020 முதல் 31.07.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு ரூ.1,40,285/– மட்டும் வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | நாள் | தயார் செய்த உணவு வகை | | காய்கறிகள் வாங்கிய அளவு கிலோ/கிராம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | இட்லி சாம்பார் | சாதம் | | |
| 1. | 01.07.2020 | 2000 | 800 | 80.500 | 4445 |
| 2. | 02.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 3. | 03.07.2020 | 2000 | 800 | 80.500 | 4445 |
| 4. | 04.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 5. | 05.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 6. | 06.07.2020 | 2000 | 800 | 80.500 | 4445 |
| 7. | 07.07.2020 | 2000 | 800 | 80.500 | 4445 |
| 8. | 08.07.2020 | 2000 | 800 | 80.500 | 4525 |
| 9. | 09.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 10. | 10.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 11. | 11.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 12. | 12.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 13. | 13.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 14. | 14.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 15. | 15.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 16. | 16.07.2020 | 2000 | 800 | 80.500 | 4465 |
| 17. | 17.07.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| 18. | 18.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 19. | 19.07.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| 20. | 20.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 21. | 21.07.2020 | 2000 | 800 | 80.500 | 4705 |
| 22. | 22.07.2020 | 1000 | 800 | 70.500 | 3915 |
| 23. | 23.07.2020 | 2000 | 800 | 80.600 | 4560 |
| 24. | 24.07.2020 | 2000 | 800 | 80.500 | 4685 |
| 25. | 25.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 26. | 26.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 27. | 27.07.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| 28. | 28.07.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 29. | 29.07.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| 30. | 30.07.2020 | 2000 | 800 | 80.600 | 4540 |
| 31. | 31.07.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| மொத்தம் | | 61000 | 24800 | 2485.7 | 140285 |

மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.1,40,285/– மட்டும் இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.07.2020 முதல் 31.07.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி வாங்கி கொடுத்த வகைக்கு அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு ரூ.1,40,285/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.765 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 7**

சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின்படி இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் (On Site Compost), பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் (Bulk Waste Generation)- நுண் உரகிடஙகு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை (அவுட்சோர்ஸிங முறையில்) 12 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளுவதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்49/2019/எச்1 நாள் 30.08.2019–ன் படி எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.09.2019 முதல் 29.02.2020 வரை பணி உத்திரவு வழஙகப்பட்டு பணிகள் நல்ல முறையில் பார்க்கப்பட்டு வருகிறது. தற்போது கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் 6 மாத காலத்திற்கு 01.09.2020 முதல் 28.02.2021 வரை பணிநீடிப்பு செய்து பணி உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(கோப்பு எண் 49/2019/எச்1)

அலுவலக குறிப்பு:

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சியில் 12 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவு பணிகள் செய்ய ரூ-10,20,000/-க்கு செலவீனஙகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வழஙகலாம்.
2. எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் 28.02.2021 வரை 6 மாத காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்

**தீர்மானம் எண்.766 அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்: 8</u>

கீழக்கரை நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிய திருத்திய அனுமதி மற்றும் உரிமையாணை கட்டணங்களை 01.10.2020 முதல் நிர்ணயம் செய்ய இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண்.749 நாள்.30.06.2020ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டது. அதன்படி, பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி 30 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டு உரிய அறிவிப்பு தினதந்தி நாளிதழில் வாயிலாக 23.07.2020 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. தற்போது நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு 30 நாட்கள் முடிவடைந்த நிலையில் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே கட்டண விகிதங்களை 01.10.2020 முதல் நடைமுறைபடுத்தவும் கட்டண விபரங்களை இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினங்களுக்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அங்கிகரிக்கலாம்.

2. திருத்திய கட்டிட உரிமையாணை மற்றும் அனுமதி கட்டணங்கள் மீது பொது மக்களின் ஆட்சேபனைகள் எதுவும் பெறப்படாத நிலையில் 01.10.2020 முதல் திருத்திய கட்டணங்களை வசூல் செய்ய அனுமதிக்கலாம்.

3. இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் பிரசிரம் செய்ய நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1537/2015/இ2)

**<u>தீர்மானம் எண்.767 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 9</u>

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014–ல் தெரிவித்துள்ளதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகஙகளுக்குத் தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தை விலையில் ஆறு மாதஙகளுக்கு மட்டும் விநியோகம் செய்வதற்கு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.187/ இ1/2020 நாள். 21.08.2020-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் 31.08.2020–ந் தேதி கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சி பணிமேற்பார்வையாளர்/பொறுப்பு அலுவலரால் (Nodal Officer) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விகிதம் | எம்.எஸ். ஜுபர் சாதிக், கீழக்கரை | எஸ்.கே.எஸ்.ஜாஹிர் உசேன், கீழக்கரை | கே.வசந்த பூபதி, கீழக்கரை |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளாங்கி | (கிலோ ஒன்றுக்கு) | 60 | 65 | 67 |
| 2 | சின்னவெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 90 | 92 | 95 |
| 3 | பெரிய வெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 61 | 65 | 68 |
| 4 | தக்காளி | (கிலோ ஒன்றுக்கு) | 62 | 64 | 68 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | கேரட் | (கிலோ ஒன்றுக்கு) | 82 | 85 | 92 |
| 6 | கத்திரிக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 62 | 65 | 68 |
| 7 | உருளை கிழங்கு | (கிலோ ஒன்றுக்கு) | 61 | 64 | 70 |
| 8 | பின்ஸ் | (கிலோ ஒன்றுக்கு) | 96 | 98 | 105 |
| 9 | கருவேப்பிலை மற்றும் கொத்தமல்லி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 110 | 120 |
| 10 | பச்சைமிளகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 102 | 110 | 115 |
| 11 | இஞ்சி | (கிலோ ஒன்றுக்கு) | 150 | 170 | 180 |
| 12 | மாங்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 90 | 95 | 107 |
| 13 | செள செள | (கிலோ ஒன்றுக்கு) | 60 | 65 | 68 |
| 14 | அவரைக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 54 | 55 | 60 |
| 15 | முருங்கைக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 52 | 55 | 62 |
| **மொத்தம்** | | | **1182** | **1258** | **1345** |

**(கோப்பு எண். 187 /2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 15 வரையிலான ஒட்டு மொத்த இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம்.ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கமிஷன் கடை, கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்குத் தேவையான காய்கறி வகைகளை 01.09.2020 முதல் 28.02.2021 வரை ஆறு மாதங்களுக்கு மேற்கண்ட விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.768அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 10</u>

கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மைய இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/A2 நாள்.18.08.2020–ன்படி கீழக்கரை நகராட்சியிலிருந்து 2020–21 ஆம் ஆண்டு சந்தா (Annual Contribution) ரூ.20,000/–ஐ செலுத்தக் கோரி கேட்பு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு இந்நகராட்சியின் சார்பாக செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா (Annual Contribution) ரூ.20,000/–ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.239/2019/சி1)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.769 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்: 11**

இந்நகராட்சியின் **2019–2020** ஆம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவினங்கள் (Receipt & Expenditure) ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விபரம் (Balance Sheet) ஆகியவைகள் புதிய ஏழு இலக்க முறையில் (CWBS) தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ABA அமைப்புக்கான ஆலோசகர் (Consultant for Municipal & Town Panchayat ABA System) கோவில்பட்டி திரு.வி. சீனிவாசன், எம்.காம்., சி.ஏ., என்பவருக்கு கட்டணம் ரூ. **35,000/–** மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.261/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.**35,000/–** இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.770 அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**